மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 427 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். வினா எண் 428, திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.*

428—

புதிய மதகுகள் அமைத்தல்

***7684—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சீகன்காடு பெரிய ஏரியிலுள்ள பழுதடைந்த மதகுகளை மாற்றி, புதிய மதகுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 429,—திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.*

429—

லைனிங் கட்டித் தருதல்

***9684—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் வடிகால் ஆறு, பள்ளமாக இருப்பதால் தெற்குராசன் வாய்க்காலில் பாசன நீர் கசிவு ஏற்பட்டு நீர் விரயமாவதைத் தடுக்க திருப்பனந்தாள் அணைக்கரையிலிருந்து ஆணைக்காரன் சத்திரம் (கொள்ளிடம்) வரை 'லைனிங்' கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், 1997-98ஆம் நிதியாண்டில் கட்டப்படுமா?